செய்தி வெளியீடு எண் : 2069 நாள் : 17.11.2022

## செய்தி வெளியீடு

**பழங்குடியின சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூறும் வகையிலும், திரு பிர்ஸா முண்டா அவர்களின் நினைவினை போற்றும் வகையிலும் பழங்குடியினர் பெருமை தினவிழா கொண்டாட்டம் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது ஆணைக்கிணங்க, ஆங்கில ஏகாதிபத்திய காலனி ஆதிக்கத்தை எதிர்த்து போராடிய ஜார்கண்ட் மாநிலத்தைச் சார்ந்த திரு பிர்ஸா முண்டா அவர்களின் நினைவினை போற்றும் வகையிலும், அனைத்து பழங்குடியின சுதந்திர போராட்ட வீரர்களின் பங்களிப்பினை சிறப்பிக்கும் வகையிலும், அவர்களை இத்தலைமுறையினருக்கு நினைவு கூறும் வகையில் பழங்குடியினர் பெருமை தின விழா சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் 17.11.2022 இன்று நடைபெற்றது. இவ்விழாவினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், மாண்புமிகு சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. பிரியா ராஜன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி பழங்குடியினர் இசை, நடனத்தை துவக்கி வைத்தும், பழங்குடியினருக்கு "சாதனையாளர்கள் விருதுகள்" வழங்கி பேருரையாற்றினார்கள். மேற்காணும் பழங்குடியினர் தின விழாவில் பழங்குடியினரின் பெருமையினையும், அவர்களின் தியாகங்களையும் மக்களுக்கு நினைவு கூர்ந்தனர். மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிகாட்டுதலின் படி, இத்துறையின் சார்பில் பழங்குடியினர் நலனுக்கான பல்வேறு திட்டங்களை விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தென்காசி சு ஜவஹர், இஆப., அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, அரசு கூடுதல் செயலாளர் திரு.சு. பழனிசாமி, இஆப., தாட்கோ, மேலாண்மை இயக்குநர், திரு.கே.எஸ். கந்தசாமி, இஆப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், திரு. ச. அண்ணாதுரை, மதொப., பழங்குடியினர் ஆய்வு மையம் இயக்குநர் முனைவர். ச.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்காணும் பழங்குடியினர் தினவிழவில் சுமார் 1200 பழங்குடியின மக்கள் தத்தம் பாரம்பரிய உடைகளில் கலந்து கொண்டு இசை, நடன நிகழ்ச்சிகளில் மகிழ்ச்சியுடன் பங்கு பெற்றனர்.

**கூடுதல் தலைமைச் செயலாளர்**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in